[30th March 1966

Special Armed Police

* 516 Q.—SRI C. KOTHANDARAMA BHAGAVATHAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to recall the Special Armed Police of Avadi, now stationed at Jullundur (Punjab District) for use in our State?

கனம் திரு. பூ. கக்கன் : இக் கேள்விக்குப் பதில் அளிப்பது பொது மக்களின் நலனிற்கு ஏற்றதன்று.

சென்னை மாநகரைச்சுற்றி வட்டச்சாலை

* 517 கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகரைச் சுற்றி Ring Road ஒன்று அமைக்கும் யோசனை எந்தக் கட்டத்தில் இருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : A statement[a] is placed on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ரிங்ரோடு அமைக்க முதல் நடவடிக்கையாக நகருக்கு வெளி ஊர்களிலிருந்து வருகிற பஸ்கள் எல்லாம் நகரத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கிற வகையில் கிழக்கே கொரட்டூர் வரையில், தெற்கே கிண்டி தொழிற்பேட்டை வரையில், மேற்கே ஆரம்பாக்கம் அருகில் வெளி ஊர் பஸ் நிலையங்கள் கட்ட உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : பி. டபிள்யூ. டி.-யைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கவேண்டியதற்கு நிலைமை இது மாதிரியிருக்கிறது. மற்றவை பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குக் கேள்வி போடவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : இப்படிப்பட்ட ஒரு சுற்றுப்பாதை அமைத்துவிட்டு வெளியூர்களிலிருந்து வருகிற பஸ்கள் அந்த இடத்தில் நிற்கவேண்டுமென்று வைத்து விட்டால் வெளி ஊர்களிலிருந்து சென்னைக்கு வருகிற பிரயாணிகள் கஷ்டப்படுவார்கள். அப்படிப்பட்ட பிரயாணிகள் பஸ்களில் சென்னை நகர உட்பகுதிக்கு வர வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நகரத்திற்குள் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலை குறைக்க வேண்டிய ரோடு அமைப்பை பொறுத்தவரையில் உள்ளது இந்தக் கேள்வி.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை நகரில் ஓடிக்கொண்டிருக்கிற பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இவற்றைத் தூர்த்துவிட்டு அங்கு பாதாள ரெயில்கள் ஓட்ட வேண்டுமென்ற யோசனை கூறப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றிய அரசாங்கக் கருத்து என்ன ?

---

[a] Printed as Appendix I on pages 510–511